வகையில் அறிவிப்பு விரைவில் வரும். துறை ரீதியாக ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்; அறிவிப்பு விரைவில் வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

பள்ளிக்குக் கட்டடம்

***6114—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, பூலாஞ்சேரி ஊராட்சி, பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஏற்கெனவே போதுமான அளவில் 4 வகுப்பறைகள் கொண்ட இரண்டு கட்டடங்கள் பயன்பாட்டில் உள்ள நிலையில், கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். காவேரி டெல்டா பகுதி விவசாயிகளின் நெடுநாளைய கனவான காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்த எளிமையும், இனிமையும் நிறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை அன்போடு வணங்குகின்றேன்.(மேசையைத்தட்டும் ஒலி) அமைதியும், அடக்கமும் நிறைந்து இந்த நல்லாட்சிக்குத் துணை நிற்கும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பூலாஞ்சேரி ஊராட்சி, பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 85 குழந்தைகள் படித்து வருகின்றனர். அப்பள்ளியில் இருக்கக்கூடிய பள்ளிக் கட்டடம் மிகவும் மோசமாக பழுதடைந்த நிலையில் உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தருவாரா என்று கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி சட்டமன்றத் தொகுதி, தாத்தியாரம்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூலாஞ்சேரி ஊராட்சி, பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 85 மாணவ, மாணவியர் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயின்று வருகின்றனர். இந்த ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஏற்கெனவே மொத்தம் 1,500 சதுர அடி பரப்பளவில் 4*

வகுப்பறைகள் கொண்ட 2 பள்ளிக் கட்டடங்கள் பயன்பாட்டில் உள்ளன. 2 பள்ளிக் கட்டடங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 2003–2004 மற்றும் 2005–2006 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளுக்கு தண்ணீர் வசதி மற்றும் கழிப்பிட வசதி ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கின்றன. மேலும், இப்பள்ளிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில் 2018–2019 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் சுற்றுச் சுவர் கட்டித்தரப்பட்டிருக்கின்றது. பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பயிலும் 85 மாணவ, மாணவியர்களுக்கு தற்போது பயன்பாட்டிலுள்ள 4 வகுப்பறைகள் கொண்ட 2 பள்ளிக் கட்டடங்கள் போதுமான அளவில் உள்ளதால், கூடுதலாகக் கட்டடம் கட்டும் அவசியம் இல்லையென்று துறையின்மூலம் பதில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழுதடைந்துள்ளதாகச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, அப்பள்ளி துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

திரு. எம். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாப்பாப்பட்டி ஊராட்சி ஒன்றியம், வேலம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 110 குழந்தைகள் படித்து வருகின்றனர். அப்பள்ளியில் போதுமான கட்டட வசதி இல்லை. ஆகவே, அப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 2011 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுக் காலத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மட்டும் ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 946 ஊரகப் பள்ளிகளில், 11 பணிகள், 9 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதேபோல், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசின் நான்காண்டு காலத்தில், ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூபாய் 3 கோடியே 1 இலட்சம் மதிப்பீட்டில் 96 ஊரகப் பள்ளிகளுக்கு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அப்பள்ளியில் 110 மாணவர்கள் படித்து வருவதாகக் கூறியிருக்கிறார்கள். கண்டிப்பாக, அப்பள்ளி துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியின் கல்வித் துறை நிருவகித்துக் கொண்டிருக்கிற தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் என்று அனைத்து பள்ளிகளுக்கான கட்டடங்கள், இதற்கு முன்னர் மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில், மூலதன நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டு, அது கூடுதல் வகுப்பறைகளாக இருந்தாலும், ஆய்வரங்கங்களாக இருந்தாலும், விளையாட்டுத் திடல்களாக*

இருந்தாலும், அந்த நிதியிலிருந்து செயல்படுத்தப்படுவதென்பது தொடர் வாடிக்கையாக இருந்து கொண்டிருந்தது. ஆனால், கடந்த 4 ஆண்டுகளாக, மாநகராட்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரை, அந்தந்தத் தொகுதிகளிலிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலேயே பள்ளிக் கட்டடங்கள் வேண்டும், ஆய்வகங்கள் வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை விடுத்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மட்டுமே கட்டப்படுகிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, முன்னர் இருந்ததைப்போலவே, மூலதன நிதியிலிருந்து அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை, குறிப்பாகக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், மூலதன நிதியிலிருந்தும் கட்டப்படுகின்றன, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் நிதியிலிருந்து அவரவர்கள் பகுதியிலிருக்கக்கூடிய மக்கள் கோரிக்கை வைக்கின்றபோது, அந்தக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கிறார்கள். அப்பள்ளிகளில், நீண்ட காலமாக அவர்களுடைய பெயர்கள் நிலைத்திருக்கக்கூடிய அளவிற்குக் கொடுக்கிறார்கள். நீர்நிலைத் தொட்டி, கட்டடங்கள், ஆய்வகங்கள் அனைத்திற்கும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுக்கிறார்கள். இருந்தாலும்கூட, கல்வித் துறையின்கீழ் 119 தொடக்கப் பள்ளிகள், 92 நடுநிலைப் பள்ளிகள், 38 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளிட்ட 281 பள்ளிகள் சென்னைப் பெருநகர மாநகராட்சியின்மூலம் செயல்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 12]

முற்பகல் 10–20

இதில், 2011 முதல் 2016 வரையுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் 5 ஆண்டுக் கால பொற்கால ஆட்சியில், சென்னைப் பள்ளிகள் ரூ.29.51 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 33 பள்ளிக் கட்டடங்கள், வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை தேவைப்படும் இடங்களில் மூலதன நிதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி என இரண்டிலிருந்தும் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அதுபோல், தொடர்ந்து அவசியமான இடங்களிலும் கட்டப்படுகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை கவனத்தில்கொண்டு அதன் அடிப்படையில் மூலதன நிதியிலிருந்தும் ஒதுக்கித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட சுந்தரேசபுரத்தில் ஊராட்சி ஒன்றியப் பள்ளி மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதை நான் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் சென்ற வருடமே சொல்லியிருந்தேன். அந்தப் பகுதி என்பது ஏற்கெனவே கேரளாவோடு இருந்த பகுதி, ஓட்டுக் கட்டடங்களையுடைய பள்ளி. அந்த ஓடுகள் எல்லாம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், தற்போது அந்தப் பள்ளிக்கூடங்களில் யாரும் இல்லை. தற்போது அந்தக் குழந்தைகள் சமுதாய நலக் கூடங்களில் படித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை உள்ளது. இது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருப்பதன் காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொன்னார்கள். ஆனால், இதுவரையிலும் அங்கு பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதுகுறித்து எந்த அறிவிப்பும் வரவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். எனவே, சுந்தரேசபுரம் பள்ளிக்கூடத்தில், போர்க்கால அடிப்படையில் பணிகளைத் தொடங்க வேண்டும்*

என்று இரண்டு வருடங்களாக நான் சொல்லி வருகின்றேன். அதுபோல, இலத்தூர் பகுதியிலும் கேரளாவைப்போல் இருக்கக்கூடிய ஓடு வேய்ந்த பள்ளிக் கட்டடங்கள்தான் உள்ளன. இதுவும் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்ற காரணத்தினால், இதுபோன்ற பள்ளிக்கூடங்களை சரி செய்யக்கூடிய வகையில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் சம்பந்தப்பட்ட கோரிக்கையினை வைத்தார்கள். கட்டமைப்புகள் மற்றும் வசதிகள் எங்களது உள்ளாட்சித் துறையின்கீழ்தான் இருக்கின்றன. தொடர்ந்து உள்ளாட்சித் துறைதான் மேற்கொண்டு வருகின்றது. அதனை எங்களிடம் அனுப்பிவிடுவார்கள். எனவே, அவர்கள் சொன்ன கோரிக்கை முழுமையாக எங்களிடம் வந்து சேர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரகப் பகுதிகளில் உள்ள பல்வேறு ஆரம்பப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மாணவர்களுக்குப் போதிய அளவில் புதிய கட்டடங்கள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. ஆண்டுதோறும் பழுதடைந்த பள்ளிக் கட்டடங்கள் மற்றும் அவற்றிற்கான உட்கட்டமைப்புகள், பழுதுபார்த்தல், பராமரிப்புப் பணிகள், இன்றைக்கு பல்வேறு நிதிகளின்கீழ், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் தனி விருப்ப நிதி, தன்னிறைவுத் திட்டம், ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், வட்டார, ஊராட்சி பொது நிதிகள் ஆகியவற்றின்மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவி

2020 மார்ச் 12]

அம்மா அவர்களின் 2011–2012 முதல் 2015–2016 வரையுள்ள ஐந்து ஆண்டுகளில் மட்டும் ரூ.390 கோடியே 39 இலட்சம் மதிப்பீட்டில் 21,650 பள்ளிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குப் பின்னர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அரசில் 2016–2017 முதல் கடந்த நான்கு ஆண்டுகளில் கிட்டத்தட்ட ரூ.198 கோடியே 68 இலட்சம் மதிப்பீட்டில் 7,877 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 6,833 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1,044 பணிகள் மீதம் இருக்கின்றன. ஆக, கடந்த 9 ஆண்டுக் காலத்தில் ரூ.589 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 29,554 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கடையநல்லூர் ஊராட்சி சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் கண்டிப்பாக துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படும். அதுபோல், கேரளா ஓடுகள் உள்ள அந்தப் பள்ளிக் கட்டடங்களும் நன்றாக இருந்தால் விட்டுவிடலாம்; சரியில்லை என்றாலோ அல்லது பழுதுகள் இருந்தாலோ அவையும் கண்டிப்பாக தனிக் கவனமாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது இயக்கத் தலைவர் தளபதி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். நத்தம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இரண்டு வருடங்களுக்கு முன்பு இடிக்கப்பட்ட கட்டடம் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன். அங்கு சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் மரத்தடியில் பயில்கின்றார்கள். நத்தத்தில் வட்டாரக் கல்வி அலுவலகம் இடிந்துபோகின்ற நிலையில் உள்ளது. அதுவும் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை மனதில்கொண்டுதான் இந்த ஆண்டு நபார்டு திட்டத்தில் அது இணைக்கப்பட்டிருக்கின்றது. செப்டம்பர் மாதத்திற்குள் நபார்டு திட்டத்தில் அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள குருமணாங்குடி மற்றும் நீலப்பாடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு பள்ளிக் கட்டடங்கள் 60 ஆண்டுகளுக்கு முன்பாக ஓடு வேய்ந்த கட்டடங்களாகக் கட்டப்பட்டிருக்கின்றன. பருவமழை காலத்தில் மாணவர்கள் மழையில் நனையக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, எங்களுடைய டெல்டா மாவட்டங்களில் ஒரு சிறப்புத் திட்டத்தை எடுத்துக்கொண்டு, 50 ஆண்டுகள், 60 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்டுள்ள அந்தக் கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்களை பள்ளிகளுக்குக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியிலே உள்ள

2020 மார்ச் 12]

பள்ளிக் கட்டடங்கள் 60 ஆண்டுகளாக ஓட்டுக் கட்டடங்களாக இருக்கின்றன, பழுதடைந்து இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் கூறியிருக்கிறார்கள். அவரது கோரிக்கை துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, பழுதடைந்திருப்பின் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

கீழ்வேளூர் தொகுதியைப் பொறுத்தளவில், கஜா புயலால் பாதிக்கப்பட்ட சமயத்தில் எல்லா ஊர்களுக்கும் சென்றபொழுது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் எங்களுடன் வந்திருந்தார். அந்தப் பகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கும் மக்கள் அதிகமாக இருப்பதால், கண்டிப்பாக உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.*

திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் உள்ள கழுதூர் அரசு மேல்நிலைப் பள்ளி, திட்டக்குடி அரசு மேல்நிலைப் பள்ளி, பெண்ணாடம் அரசு மேல்நிலைப் பள்ளி, ம. பொடையூர் அரசு மேல்நிலைப் பள்ளி, இந்தப் பள்ளிகளெல்லாம் துவங்கி சற்றேறக்குறைய 60 ஆண்டுகளுக்குமேல் ஆகின்றன. குறிப்பாக, அந்தப் பள்ளிகளில் உள்ள ஆய்வகங்கள் இருக்கக்கூடிய கட்டடங்களெல்லாம் இடிந்து, கூரைகளெல்லாம் மிகவும் பழுதடைந்துள்ளதால் ஆய்வகப் பொருட்களையெல்லாம் வைக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் நேரடியாகச் சென்று அந்தப் பள்ளிகளை ஆய்வு செய்த காரணத்தால் அமைச்சர் அவர்களுக்கு இதனைச் சொல்கின்றேன். ஆகவே, நான் குறிப்பிட்ட இந்தப் பள்ளிகளில் உள்ள ஆய்வகங்களுக்கு கூடுதலாகக் கட்டடம் கட்டித் தரப்படுமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2020 மார்ச் 12

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி உள்ளாட்சித் துறைக்கான கேள்வி இல்லை. உள்ளாட்சித் துறையில் இருக்கிற நடுநிலைப் பள்ளிகள் வரையிலும் உள்ளாட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஆய்வுக்கூடம் என்பது உயர்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளிகளில்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

மீன் இறங்குதளம்

***35806—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி வட்டம், சந்திரப்பாடியில் மீன் இறங்குதளம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி வட்டம், சந்திரப்பாடியில் மீன் இறங்குதளம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.